162

உ

ஸ்ரீ விராட் விஸ்வப்ரம்மணே நம:

பாலஜோதிட கணிதம்

S. N. சஞ்சீவி நாயக்கர் அவர்களின்

பிரதம மாணவர்

லால்குடி தாலூகா புதூருத்தமனூர் கிராமம்

பாலகவி

S. N. பிச்சை ஆச்சாரி அவர்களால்

இயற்றிய

திகழ்விச்சித்ராநந்த மென்னும்

பக்திரச கீர்த்தனாம்ருதம்.

இன்னூல்,

ஆசிரியரின் ஆசிரியரான

ஷை

S. N. சஞ்சீவி நாயக்கர் அவர்களால்

பார்வையிட்டு,

திருச்சி ஸ்ரீ நிலையம் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

1932.

[அணா 6.

ARTISTIC COLOUR PRINTERS
BIG BAZAAR, TRICHINOPOLY

Q2:417
N32
170720

9 APR 1932

உ

ஸ்ரீ விராட் விஸ்வப்ரம்மணே நம:

பாலஜோதிட கணிதம்

S N. சஞ்சீவி நாயக்கர் அவர்களின்

பிரதம மாணவர்

லால்குடி தாலூகா புதூருத்தமனூர் கிராமம்

பாலகவி

S N. பிச்சை ஆச்சாரி அவர்களால்

இயற்றிய

திகழ்விச்சித்ரானந்த மென்னும்

பக்திரச கீர்த்தனாம்ருதம்.

இந்நூல்,

ஆசிரியரின் ஆசிரியரான

ஷை

S N. சஞ்சீவி நாயக்கர் அவர்களால்

பார்வையிட்டு,

திருச்சி ஸ்ரீ நிலையம் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

1932.

இதன் விலை] [அணா 6.

உ

முகவுரை.

அறிவிற் சிறந்த ஆன்றோராகிய இவ் வுலகின்கண் உயர்வுற்ற பரத கண்டத்தின் சிறப்புற்றோங்கிய வித்வ ரத்னங்களாகிய கனம் வித்வ சிரோன்மணிகளுக்கும், மற்ற ஏனையோர்களுக்கும் தெரிவிப்பதென்னவென்றால்:—

இந்நூலை எழுதிய ஆசிரியர் எழுதியநூல் இதுவே முதலாகும். ஆதலால், இன்னூலிற் இதளடி சீர், வரிசை, எடுப்பு, குறைவு, சந்தம் குறை, சந்தக்கூட்டு, இலக்கண இலக்கிய அச்சுப்பிழை முதலிய குற்றமிருப்பினும், அக்குற்றத்தை (சலதாரை விழு நீரும்) என்ற ஆன்றோர் பழமொழிக் கிணங்க, மதலைச்சொல் செவிக் கின்ப மெனவும் குறை புகலாது இன்னூலை ஆதரித்து ஏற்றுக் கொள்ளுமாறு கோருவதுடன், இன்னூலிற் வரும் ஆதாயமான லாபங்களை தர்மத்திற்கு சேர்க்கப்படும்,

இப்படிக்கு,
தங்களன்புள்ள தமிழபிமானி,
பால ஜோதிட கணிதம்,
S. N. சஞ்சீவி நாயக்கர்,
புதூருத்தமனூர், பூவாளூர் P. O.
லால்குடி, தாலூகா, திருச்சி.

உ

வள்ளிமணாளன் றுணை.

திகழ் விச்சித்திரானந்த மென்னும் பக்திரசக் கீர்த்னாம்ருதம்.

கணபதி துதி.

சங்கரனார் மகிழும் நல்ல சற்குணனே
ஆனைமுகா சுயங்கரமாயான் பாடிச்
சொல்லிவரும் செந்தமிழிற்
ஜெயமாக நீயிருந்து சித்திதர வந்தருள்வாய்.

(விநாயகர் பேரில்)

தஜாதராஜகுமாரா என்ற மெட்டு.
இராகம் இந்துஸ்தான் பியாக், தாளம் ஆதி.

பல்லவி.

(1) பாலகணேச விநோதா அன்பர் நீதா
அருள் தா தா கண நாதா

அநுபல்லவி.

மோஷிக வாகன மீதேரி ஜோராய்
முதல் விநாயகனே நீர் கதிதர நேராய்
மூர்த்தியே பாலனைக்கார்த்திட வாராய்.

முன்னின்று துதி செய்தேனே
நானே இப்போதானே
வரக்காணேன் பகவானே (பா)

(பல்லவி எடுப்பு.)

ஞானவேதாந்த புண்ய சீலா
சத்திபாலா எனையாளா அநுகூலா

(அநுபல்லவி எடுப்பு.)

ஏனோ என்மீதினில் இத்தனை வர்மம்
ஏழையைக்காத்திட கடமையுன் தர்மம்
ஏற்றியேபாடினே னென்செய்வேன் சிர்மம்

இனிய புகழ் பெற்றிட சீரே
வருவீரே இப்போ நீரே
வந்து காப்பீரே (பா)

(வாணிபேரில்)

இராகம் கல்யாணி—தாளம் ரூபகம்.

பல்லவி.

(2) கமல பூஷணியே வாணி
காற்குமே தனி (கம)

அநுபல்லவி.

காக்ஷிதந்தருள் கல்யாணி
கார வீர கோர ராணி

கார்த்து ரெக்ஷிக்கும் கமலாயணி
காருண்யமான பிரதாயனீ
காரணி பூரணி வீரணி கருணைதாயே நீ (கம)

(அநுபல்லவி எடுப்பு.)

வெள்ளைக்கலையணியுமேனி வேத கீதபோத ஞானி)
வீணை சங்கீத பிரதாய நீ
விமல வெண்டாமரை சூர்தாயனி
வீரணி காரணி பிச்சை விஷய பூஷணி (கம)

ஸ்ரீ ராமபிரான் பேரில்.

சேவற்கோடியோனே என்ற மெட்டு.

இராகம் தேசிக தோடி—தாளம், ஆதி.

பல்லவி.

(3) ஸ்ரீ ரெகுராமா உன்னை தெரிசித்தேனே
ராமா தெரிசித்தேனே பூமா தெரிசித் தேனே (ஸ்ரீ ரெ)

அநுபல்லவி.

பாற்கடல் நீதா பள்ளிகொள் வேதா (ஸ்ரீ ரெ)

(தொகையரு.)

சீதாபிராமனே சிம்மாவுதாரனே
ஜெயசக்ர பூமனே

சித்தம் வைத்தி துதிபக்தியாயருள்புரி
ஸ்ரீ கூர்ம்மாவதாரனே

சரணம்.

வில்லம் பெய்திடும் விகடவியாதி
தொல்புவிகூனியாற் துயர சன்யாசி
தொண்டன் பிச்சைக்கொண்டாடி
தொழுது பூஜித்தேன் பாடி (ஸ்ரீ செ)

(கிராமதேவதை ஐயனர் பேரில்.)

உடுமலையின் முத்துச்சாமி பாட்டை என்ற மெட்டு.
இராகம் செஞ்சுருட்டி, தாளம் ஆதி.

(4) ஈசன்மாலருள் விவேக னந்தா அருள்
இன்பமொழிபோல்வளர் முகுந்தா புகழ்
ஐயனரே உம்மையானும்
மெய்யாகவே யான் துதித்தேன்
ஐயா புகழ் மெய்யா (ஈச)

வெள்ளையானை மீதிலுற்ற ஐயா நல்ல
விஷ்ணுஅம்ஸமாகவந்த துய்யா இந்த
வேளை தன்னில் வந்து எந்தன்
கவலைதன்னை தீர்த்தருள்வாய்
கர்த்தா பரி சுத்தா. (ஈச)

சைவ சித்தாந்தசின்மய தேகா உண்மை
சாதுக்கள்மெச்சிடும் புண்ய போகா சுக
போக பாக்யந்தந்தருள
மோகமதில் வந்துதித்த
யோகா நல் விவேகா (இச)
உத்தமனூர் புதூர்தனில் நீரே அருள்
உண்மையாக நீரமர்ந்த சீரே இந்த
உத்தமத்தொண்டன் றன்னை
பக்திவைத்து காத்தருள்வாய்
தானே குண வானே (ஈச)
சோழநகர் தன்னில் வாழும் வாசனும் நல்ல
தொண்டர்களுக்கன்புசெயும் தாசனும் என்று
தோத்தரித்து சஞ்சீவியான்
காத்திருந்து தோத்தரித்தேன்
நானே உம்மைத் தானே (இச)

(கிராமதேவதை துரைசாமியின் பேரில்)
செந்தமிழை உலகினிற் என்ற மெட்டு.

இராகம் செஞ்சுருட்டி, தாளம் ஆதி.

(5) ஞானவேந்த புண்ய நாதவேதாந்த புல்லாங்
ஊதுமெய்த்துரை சாமியே [குழலை
உனையே போற்றி
நானுந்துதித்தேன் சாற்றியே

(செஜல்.)

நாடிப்புதூர்தனில்
நீடியமர்ந்தனை
பாடிபுகழ்ந்துகொண்
டாடிட வேண்டியே
நானின்று தோத்தரிக்கேனே
இப்போது உம்மை
நாடி நமஸ்கரி த்தேனே (ஞா)

(பல்லவி எடுப்பு.)

விஸ்வகுலத்துதித்து வெற்றியுரும்
பிச்சையை நீவிரைவினில் காப்பதுன்பாரம்
இத்தகி வந்து
விரும்பியே பார்ப்பதென்னேரம்
விகஜித குதிரையிற்
தகததவென சொலி
இகபர சுகந்தா
இதுவேளை வரவேணும்
என்று நான் துதிசெய்தேனே
ஏழையை காக்க
வந்தருள் நற் குணவானே (ஞா)

(ஈஸ்பரன்பேரில்.)

ஆண்டிபண்டாரம் என்ற மெட்டு.

(பல்லவி.)

(6) சொக்கர் மீனாக்ஷி மதுரை
ஜோதிக்கண் காக்ஷி தேவ (சொ)

(அநுபல்லவி.)

நரிபரியாக்கியல்லோ
நற்காக்ஷி கொடுத்த யீசா
திருவடி நாடியல்லோ
தேடிவந்தேன் கார்த்தருள்வாய் (சொ)

வாணிச்சி பிட்டைத் தின்று
வைகைக்கரை அடைக்க வென்று
மாணிக்கப் பிரம்பினாலே
மனனனடி பட்ட யீசா (சொ)

நஞ்சரவத்தைப் பூண்டு
நானிலத்தில் காவிதுண்டு
கொஞ்சுமான் மழுவை எந்தி
குதித்து வந்தருளுமீசா (சொ)

அசுரருக்காகவல்லோ
ஐவாளி உட்புகுந்தீர்
மோகினிமாயவனால்
மூழ்கிவந்திரீஸ்பரரே (சொ)

சைலங்கிரி புகழும்
கர்த்தாவே சோமசுந்தரா
புகழாகவே பிச்சை நான்
போற்றி நின்று தோத்தரித்தேன் (சொ)

சுஜன ஜீவனு என்ற மெட்டு.

இராகம் நாட்டைக்குறிஞ்சி, தாளம் ரூபகம்.

பல்லவி.

(7) ரிஷபவாகனு நிர்த்தனவிநோதனு யீசா) (ரிஷ)

அநுபல்லவி.

பூர்சபூவர்ணுகைலே புகழும் ராஜனும்
புஷ்பமே தங்க பஸ்பமே
திருநீரைப் பூசியவா ஈசா (ரிஷ)

சரணம்.

திவ்ய சாஸ்ரத்ரிகண்நேத்ர
ஜெகப்ர காசனும்
ஜெகப்ர காசனும் மலர்
ஜோதி ரோஜனும்
ஜோதியே பிச்சை நீதியே நல்ல
கியாதியே நேமா (ஈசா) (ரிஷ)

ஸ்ரீ ராமா என்ற மெட்டு.

இராகம் அமிர்வாகினி, தாளம் ஆதி.

பல்லவி.

(8) ஜே சங்கராசிவா சூடகற்பூராதீபா
சிறுவனுக்கருள் தாவா நீ த நி ச ரி க மபத
(சே)

(அநுபல்லவி.)

நந்திவாகனனே நடனயீஸ்பரனே
நாதகிண்கிணி வேத நன்மணி
போத பொன்மணி போகனே (சே)

சரணம்.

புலித்தோலாசனமீதில் புவின்ற பிரகாசா
புஸ்ப விமானமதில்
ஜோதி சொக்கேஸ்பரா துதித்தேன் சர்
[வேஸ்பரா
தோத்திரம் சிறுவன் பிச்சை
சாஸ்திரப் பஞ்சாக்ஷரா (சே)

தாளம் ஆதி, இராகம் தேசிகமுகாரி.

பல்லவி.

(9) பம்பம்பம் பழனி நாதனே
பாற்காவடி கந்தனே (பம்)

(அநுபல்லவி.)

நம்பும் பேர்களுக் கெல்லாம்
இன்பந்தரும் பூமானே
ஞான விநோத
சங்கீத போத (பம்)

(தொகையரு.)

இக்கலியுகம்தன்னிலே உனைவிட மெய்யான
கர்த்தனும் வேறுமுண்டோ
கருதிடும் பாலனை உறுதிவைத்தன்புடன்
காற்பதுன் கடமை என்றே

(ச ணம்.)

அங்கெங்கும் காவடி களநேகம்
எங்கெங்கும் பால் பொங்கு விநோதம்
ஆண்டியின் பாதம் அருட்பிரசாதம்
வேண்டினேன் பிச்சை விமரிசை
போதம் (பம்)

தொழிலோன் தலை என்ற மெட்டு.
இராகம் காபி, தாளம் ஆதி

(பல்லவி.)

(10) பழனபுரிக்கதிபதி குமரனே
பார்க்கபார்க்க மனமே தினமுந்துதி (பழ)

(அநுபல்லவி.)

ஜெக ஜோதி தேன்மழை பொழிந்திடும்
சேகண்டி வாத்தியமே தினமுந்தி (பழ)

(சரணம்.)

பஞ்சாமிர்த பழமது ஒழுகவே
பறந்து ஜொலிக்கு முகமே தினமுந்தி (பழ)
செஞ்சேவற் காவடி சேவடி
வந்திட வேதினமே தினமுந்தி (பழ)
வேதாந்த விகசித மயில் வர
வேண்டினேன் சிறுவன்பிச்சை தினமுந்தி (ப)

இராகம் தேசிகம், தாளம் ஆதி.

(11) பழனிமலையில் வாழ் பண்டார சன்யாசி
பார்வதிஅருளினால் பாலன் சுதேசி (பழ)
குறவள்ளியைமணர்ந்த குமர்குருபரா
கூர்முனைவேலைக் கொண்டாடுந்தராதரா (பழ)
சந்தனவிபூதிருத் ராக்ஷ விநோதம்
சாமிமலையிர்வளர் சற்குரு வேதம் (பழ)
சங்குசேகண்டிவாத்ய சப்த சடாக்ஷரா
சன்யாசி ரூப வேஷம் சாற்றுமனோகரா (பழ)
தாள்பணிந்தேன்பிச்சை த்தருணம்கண்பாராய்
தற்பரா பொற்பாதத்தை சாற்றினேன்
நோரா (பழ)

வனசாக்ஷி என்ற மெட்டு.

இராகம் இந்துஸ்தான் தோடி தாளம் ஆதி.

பல்லவி.

(12) மலர்க்காக்ஷி மயிலுடன் நடமிடும் (மலர்)

அனுபல்லவி.

மாதுவள்ளி குறமாதி னிடஞ்சென்ற

சரணம்.

பார்க்கப் பார்க்கமயில் பறக்கச்செய் வேலன்
யார்க்கும் நினைந்த அருள் தீர்க்க சிங்காரன்
கார்க்கக் கருணையுள்ள
கதிர்வடி வேலன்
கமலிபாலன் கந்தவேலன்
காருண்ய கடாக்ஷ சீலன் (மலர்)

சன்யாசி ரூபசடா க்ஷரவேலன்
சந்தன விபூதி ருத் ராக்ஷ லோலன்
சர்க்கரை தேன்மழை
பொழியுஞ் சீராளன்
சடாக்ஷர வேலன் ஷண்முகலோலன்
குடு குடு சீலன். (மலர்)

பாற்காவடி அபிஷேகம் பார்க்கவொண்ணுது
பழனிமலை யப்பன் பண்மலர் மீது
பக்தி முக்தியை
பகர்ந்திடுஞ் சாது
பாலாபிஷேகன் பான் விவேகன்
பண்புடனருள் புரிவை போகன் (மலர்)
சேவற் கொடியுடைய செந்தில்வடி வேலன்
தெய்வீக மாமயில் ஏறிடுஞ் சீலன்
செந்தமி ழுலகினில்
சிவ னுமை பாலன்
தெரிசித்தேனே தினமுநானே
திகழுடன் பிச்சை அனுஷ்டித்தேனே (மலர்)
(மாத்தாட பாராதேனே என்ற மெட்டு.)

இராகம் கமாசு—தாளம் ரூபகம்.

பல்லவி.

(13) ஈசனை நினைமனமே இருதயத்தில் (ஈசனை)

அனுபல்லவி.

மானிட த்ரேகமிக மந்திர சூக்ஷமைய்யோ
மாயமே இதுநித்ய காயமிருக்கும்படி (ஈசனை)

சரணம்.

பாடுபட்ட பணமும் தேடிவைத்த தனமும்
கூடிவிட்டு போனலுன் திரேகம் கொட்டி
பார்க்குமோ (ஈசனை)

மாடுமக்களை அற்று வீடுதனையே விட்டு
காடுநீ போகும்போது நாடுமோ இதுவெல்லாம்-
(ஈசனை)

ராட்டிமூட்டத்தி லன்று மேட்டில் படுக்கப்போட்டு
மூட்டுச் சுடலை என்பர் காட்டுக் கழுகுநின்க (ஈச)

பெண்டுபிள்ளைகளெல்லாம் பித்தாய்ப் புலம்புவார்கள்
கண்டுநீ பேசிடக் காரணமேது இனி (ஈசனை)

செந்தமிழ் பிச்சைநானும் உந்தனை நம்பினேனே
வந்துநீ காத்தருளும் எந்தனை கைலைவாசா. (ஈசனை)

(சுநளிமலை மீதில் என்ற மெட்டு.)

இராகம் செஞ்சுருட்டி—தாளம் ஆதி.

(14) கழுகுமலை மீதில்மேவும் கந்தா மச்சக்
காவடி யாடிடும்பிற பந்தா தினைக்
கானக்குற வள்ளியுடன்
மேனகை தெய்வானைபுணர்
யோகா மயில் வாகா.
சூரபத்மாவை வென்றிட்ட வீரா சுத்த
சேவற் கொடியுடநின்ற தீரா துஷ்ட
சூரனிம்சை தீர்த்ததினல்
தேவர்களுனைப் புகழ்ந்தார்
தாசுன முருகோனே.

வளையற் செட்டியைப்போல் காமனே குற
வள்ளியைப் பின்தொடர்ந்த கோமனே நல்ல
வர்ன வளேல் தன்னைக்கொண்டு
நிர்னயமுடனே சென்ற
வேதா பிரக் யாதா.
கனத்த ருத்ராக்ஷமாலை சீராய் மின்ன
கலாபமயில் மீதிலுற்ற ஜோராய் சிவக்
கர்த்தனே சிறுவன்பூசை
நித்தமுந் தொழுது நின்றேன்
கந்தா அர விந்தா.

(பாண்டியன் யீன்ற மீனாக்ஷி என்ற மெட்டு.)

இராகம் தேசிகம்—தாளம் ஆதி.

பல்லவி.

(15) வித்வ கல்யாணி பூ ரோஜா மயிலின்மேற்
பக்திகொள் பாசா (வித்வகல்)

அனுபல்லவி.

சத்திவேல் நித்யப்ரகாசா மகிதலம்
சாற்றும் சர்வேசா (வித்வகல்)

தொகையறா.

பாலாபிஷேகனே லீலாவி னோதனே
பழனிவாழ் குலவேலனே
பக்தியாய் சிறுவனுன் முத்திபெற தினந்துதி
பார்த்தருள் தினம் புரிந்தே.

(பல்லவி எடுப்பு)

ஆண்டி உன்னைவேண்டி பேயாண்டி
அடித்தேன் சேகண்டி

(அநுபல்லவி எடுப்பு.)

அடித்தேன் சேகண்டி அருளான
அன்பனுன்னை வேண்டி (வித்வகல்)

தொகையிரு.

அன்னையான பார்வதி அருளினு லுதித்தவன்
அன்பான தெய்வமே
அருகாக வைத்தென்னை உயிர்காத் தருள்புரி
ஆறுமுக மானபரமே.

(பல்லவி எடுப்பு.)

காவடிக்கார சன்யாசி கடற்கரை
எங்கும் பிர காசி

(அநுபல்லவி எடுப்பு)

சேவடி தெரிசித்தே நேசி பிச்சைநான்
தினங்கமழ் வாசி (வித்வகல்)

சாமீ நீவாப்பழனி என்ற மெட்டு.

இராகம் தேசிகம்—தாளம் ஏகம்.

பல்லவி.

(16) வேலாயுதா மயில்வடி வேலாயுதா
மயில் வடி வேலாயுதா (வேலா)

அநுபல்லவி.

விசித உசித பூஜிதமாமணி (வேலா)

சரணம்.

சீலாப் பறங்கிரிவாழ் கோலாகலாயுத ஜன

(செஜல்)

குகனே குறத்தி பாகனே பழனி
யோகனே மாமயில் வாகனேவந்தருள் (வே)

தொகையிரு.

தேனபிஷேகனே திருநீர் விவேகனே
சிவசங் கரன்பால னே
தியங்கிடும்பாலனை இரங்கியே வந்துமே
சுயவரம் அருளும் கோனே.

(பல்லவி எடுப்பு)

சாமி உனை நம்பினேன்
சரணமென வெம்பினேன்

(செஜல்)

சாற்றியே பிச்சையை
ஏற்றி மயிலுடன்
போற்றியே தினமும்
தேற்றியே கார்த்தருள் (வேலா)

வாசம் கமகமேன்ன என்ற மெட்டு.

இராகம் செஞ்சுருட்டி—தாளம் ஆதி.

(சந்தம்)

(17) துலங்கும் பழனி தன்னிற்
விளங்கு மிளங் குமரன்
முழங்கிடும் சங்கு சேகண்டி நாதம்
பால்கள் பொங்கிடும் ஸ்தலமதில்
(தினந்தோறும்) நல்ல
வெற்றிவேல் தனை
விட்டுசூர னை
குத்தி மார்பினில்
பற்றி ஏறிய
வேலனே வந்தருள்வாய்
எனைக் காக்க பாதம்
சூடினேன் உனதடி எனை சேர்க்க (துல)
மச்சக் காவடி களும்
மலைமீதி லேரியே தான்
லெக்ஷத்தாயிரங் கோடிமரு ளாட
அன்பர் ஸப்தமே அரோகரா
கொண்டாட திவ்ய
பக்தர் பாலாபி
ஷேக விநோதமும்

சுத்த நிவேத்ய
கற்பூர தீபமும்
செய்குவா ரன்பர் சிலர்
பலகோடி திருநீர்
வாங்குவார் முருகனை புகழ்பாடி (துல)

வளையற் செட்டியைப் போல
வனந்தனில் சென்றுமே தான்
வள்ளியை சிறைகொண்ட முருகோனே
திணைதெள்ளியே உண்ட குற
குமரோனே நற்
வாகனுதி மயில்
மீதி லேறியே
த்ரேகரூக்ஷ மதில்
காவி சூடியே
வந்தப்பா இந்த வேளை
கார்க்க வேணும் பழனி
கந்தப்பா நல்லவழி சேர்க்கவேணும் (துல)

எவ்வுயிர்களுக் கெல்லாம்
இடர்தீர்க்கும் கந்தனே நீ
ஏறியே மயிலுடன் வர வேண்டும்
சஞ்சீவிபோற்றியே புகழ்ந்தருள்
பெறவேண்டும் தின

மின்பமுட னுனை
நம்பும் பேர்களின்
துன்பமகலச் செயும்
பம்பனுண்டி உனை
பாரப்பா உன்மகிமை
புவிமீதே வந்து
காரப்பா க்ஷணமதில் மயில்மீதே. (துல)

சேந்தாழப் பூ என்ற மெட்டு.

இராகம் தேசிக முகாரி—தாளம் ஆதி.

பல்லவி.

(18) ஜோதி ரோஜா பூஜா நிதியே
சுகிர்த ஷண்முக பாலனே

அநுபல்லவி.

நீதிச் சுடற் கொழுந்தே
நித்த மருள் விருந்தே

(கெஜல்.)

நடிக்கும் மயிலில்
கொடிக்குள் பற்றியே
துடிக்கும் பாலனை
மடிக்கு ளேந்திடும் (ஜோதி)

(பல்லவி எடுப்பு.)

பக்தி முக்தி சித்தி தந்தருள்
பரங்கிரி மலை வேலனே

(அநுபல்லவி எடுப்பு.)

பஞ்சாமிர்தப் பழமே
பால ரூபத் தளமே

(கெஜல்.)

பரந்து மயிலில்
சிறந்து இக்ஷக்ஷணம்
வருந்தும் பாலனை
இருந்து காத்தருள் (ஜோதி)

(பல்லவி எடுப்பு.)

மாதா பிதா நீதா சற்குரு
மகிழும் பூபதி பாலனே

(அநுபல்லவி எடுப்பு.)

நீதா விபூதி மேனி
நித்தமருளுஞ் ஞானி

(கெஜல்.)

காவடிக் கந்தனே
பூவடி பிச்சைநான்

சேவடி நாடியே
பாவல ரோடினேன். (ஜோதி)

நீயே கதியே என்ற மெட்டு.

இராகம் செஞ்சுருட்டி—தாளம்.

(8-அக்ஷரம்)

பல்லவி.

(19) நீயே துணையே அப்பனே
நீயே துணையே முருகா
நீயே துணையே கந்தையா (நீயே)

அநுபல்லவி.

வந்து கார் நீ கதியே
இது சமயம் (நீயே)

(மகுடம்.)

பாலபிஷேகமும் பழனியில் முழங்க
பற்பல காவடி பணிந்துனை குலுங்க
பார்புகழ் வேலது பளீரென்று துலங்க
பதமலர் கதியென
பணிந்தே மனந்
துணிந்தே வருந்த (நீயே)

(மகுடம்.)

தேன்மழை தேன்மழை தினந்தினம் பொழியுது
சேகண்டி வாத்தியம் தினந்தின முழங்குது
சிறுவன் பிச்சையின்மனம் தியங்கியே வாடுது
தினமே என்முன் வீக்ஷணமே
வருவாய் முருகா
வருவாய் முருகா
வருவாய் முருகா
முருகா திருமால் மருகா வருவாய்
அரகா மயிலில் விறகா. (நீயே)

இராகம் கேசரி முகாரி—தாளம் ரூபகம்.

பல்லவி.

(20) பழனிநாதன் பாலவேதன் (பழ)

அநுபல்லவி.

பக்தியுடன் மாமயிலில் சித்திரபட நின்றுடிடும் ()

(மகுடம்.)

காவடி வந்து முழங்க
கந்தனை வேண்டி பால்கள் பொங்க
சேவடி வேலு துலங்க
சேவற்கொடி மயில் சிங்க (பழ)

சரமணி சற்குண ராக
நவமணி நற்குண ரீக
பொன்மணி பொற்குணபோக
போத வேத
புண்ணிய வேல் முருகையனே
மண்ணுலகம்புகழ் மெய்யனே (பழ)

சரணம்.

வர்ணமயிலுடன் வாதாடும் வேதனே
வந்தெனக் கருள்நீ தந்திடுங் கந்தனே
ஏற்றியே பிச்சைய்யா போற்றினேன் மெய்யனே
இன்பம் பொங்கும் பழனியில்
எங்கும் தங்கும் வேலனே (பழ)

திருக்கடையூரா என்ற மெட்டு.

இராகம் தேசிக முகாரி—தாளம் ஆதி.

பல்லவி.

(21) சுடர்கதி ரேசா ஜோதிப் பிரகாசா (சுடர்

அநுபல்லவி.

திணைக் கதிரோனே சிறுவனைத்தானே
தேடி ஓடி நாடி
திகழொடு

மயிலுடன்
மகிழுட னருள்புரி (சுடர்)
காவடிக் காரா கதிதர நேரா
காண வேண ஞானக்
கருளென
முருகா உன்
புகழென அருள்புரி (சுடர்)
பாலாபிஷேகா பழனி விவேகா
பாலன் சீலன் லோலன்
பரமே உனதுபதி
கரமே குவித்தேன்
பிச்சை (சுடர்)

துமரனையே என்ற மெட்டு.

இராகம் தேசிகம்—தாளம் ஆதி.

பல்லவி.

(22) பஞ்சாக்ஷரமே சிறந்த
பக்தி பரமா னந்தம் (பஞ்)

அநுபல்லவி.

செஞ்சேவற் கொடி யுடன்
நஞ்சரவங் கை கொண்ட
கொஞ்சுங் காவடிக் கந்தா
தஞ்சந் தர்க்கார்த்தருள்வாய் (பஞ்)

(தொகையிரு.)

ஸப்த சாகரத்திலே தளும்பிடும் பாலனை
சாமிநீ பார்ப்ப தன்றோ
தாயான வள்ளியுடன் நீமயி லேறியே
சமயம் வந்தருள்வ தென்றோ

(அநுபல்லவி எடுப்பு.)

சங்கு சேகண்டிக் காரன்
சன்யாசி கோஷ்டிக் காரன்
கங்கை தனையணிந்த
சங்கரன் தன் மருகா. (பஞ்)

நாதவிந்து களாதீ நமோ என்ற மெட்டு.

இராகம் அரி காம்போதி—தாளம் ஆதி.

(23) சூடகற்பூர தீபார்த வேதனே
ஆடம்பர பஜனுமிர்த வேலனே
தேவ தெய்வ குறமணி போகனே
அருள் தாரும்
சேவற் மச்சக்காவடிக் காரனே
சேகண்டி மேளவாத்ய தீரனே
தினமும் பஞ்சா மிர்தப்ர யோகனே
மயி லாட
சம்போ சங்கரா சரவண குருபர

ஸப்த தேவர்கள் சாற்று மரோகரா
தருணம் என்முனம் அருளமனோகரா
வர வேணும்.
ஞான வேதநற் பண்களைப் பாடியே
நாடி வருவார் மலைதனை நாடியே
தேனுந் தினைமா திகழான கோடியே
துணை நீயே.
ஜோதி மாமயில் நீதி சிங்காரனே
திருநீ றவிழ்த ருத்ராக்ஷ கெம்பீரனே
சிறுவன் பிச்சை தொழுதே னின்னேரமே
எனைக் காரும்.

ஐயாப் பழனிமலை வாசா என்ற மெட்டு.

இராகம் சகானா—தாளம் ஆதி.

(24) கந்தா கழுகுமலை வாசா தினந்
காக்ஷி தரவே கதி ரேசா
வெண்டாமரை மலரின் வாசா உனை
வேண்டி பூசித்தேன் ஜெகதீசா (கந்தா)

இல்லற வாழ்க்கை தனை விட்டு
ஏகாங்கியாக உட் பட்டு
சன்னதியில் மனதை நட்டு
சாஷ்டாங்கமாகவே கும்பிட்டு (கந்தா)

கார்த்து ரெக்ஷிக்குங் கந்தசாமி
எனக் கருளது தருஞ் சிவசாமி
தோத்திரம் பிசசைதுதி நேமி தமிழ்
ஜோதி சேகண்டிபுகழ் பூமி. (கந்தா)

அம்பிகா உன் மகன் குகன் என்ற மெட்டு.

இராகம் தேசிக தோடி—தாளம் ஆதி.

பல்லவி.

(25) கழுகாசல மயில் முருகன்
கண்ணன் கரிய மால் மருகன்

அநுபல்லவி.

பாவலர்கள் பாடிடவே
பச்சைமயி லாடிடவே
பூவைவள்ளி நாடிடவே
புகஷி மகிஷி அடையும் பிறபல (கழுகா)

(அநுபல்லவி எடுப்பு.)

சூரனை வேரறுத்து
ஜோதிமயி லுற்றவண்ணு
சோதனை செய்யாமலே
சுகிர்த ஷண்முக பாலா கார்த்தருள் (கழுகா)

(அநுபல்லவி எடுப்பு.)

சத்தி உமையவளின்
யுத்தி வேலாயுதத்தை
பத்தியுடனெடுத்து
சித்தி பெற்று வந்தபாலன் (கழுகா)

(அநுபல்லவி எடுப்பு.)

காவி தரிக்கும் சீலா
காவடி யாடும் லோலா
கூவி பாடினேன் வேலா
கோரி பிச்சையா நேரில்வாராய் (கழுகா)

மீனாக்ஷி ரமண என்ற மெட்டு.

இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி.

பல்லவி.

(26) மயில்வாகன முருகா
மனமிரங்கா தென்ன (மயில்)

அநுபல்லவி.

குயில் மயில் சேவல்
கோரியக் காவல்

(சஜல.)

கூவுஞ் சேவலும்
மேவும் மாமயில்
தாவுஞ் சர்ப்பத்
துடன்விளை யாடிடும் (மயில்)

(அநுபல்லவி எடுப்பு.)

செந்தூர் வேலாண்டி
சிறுவனுன் வேண்டி

(கெஜல்.)

சேவடி செந்தூரில்
காவடி வந்திட
பாவலர் வந்து
பணிந்து மகிழ்ந்திட (மயில்)

(அநுபல்லவி எடுப்பு.)

குறமணியின் சமேதா
குன்றில் விளங்கும் வேதா

(கெஜல்.)

குணநிதி விந்தா
கோரினேன் சந்தா
மறைமலர் பந்தா
மகிழ்பிச்சை கந்தா (மயில்)

அடங்கலும் ஜெகஜோதி முழங்கிடும் என்ற மெட்டு.

இராகம் செஞ்சுருட்டி—தாளம் ஆதி.

பல்லவி.

(27) சிறந்த செம்பொன் சேவடி பம்பன்
திவ்ய சடாக்ஷர நண்பன்

உ

விளம்பரம்.

இன்னூல் ஆசிரியரான பாலகவி S. N. பிச்சை ஆச்சாரி அவர்களாலியற்றிய பஞ்சபாண்டவாள் சரிதையின் ஓர் பிரிவாகிய அபிமன்னன் சுந்தரித் திருமணமென்னும் சரித்திரமும், துவாத சாந்தமாகிய மதுரையின் கண் சோமசுந்தரர் விளையாட்டாகிய, 64 திருவிளையாடலிற் பழியஞ்சின படலத்தை, (பத்மலோஜனி சரித்திர மென்னும் நாமம் சூட்டி) இந்த 2 சரித்திரங்களும் புதிய தற்கால நாகரீக வர்ண மெட்டுகளுடன், கூடிய சீக்கிரம் வெளி வரும். புஸ்தகம் வேண்டியவர்கள் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதி தெரிந்துகொள்ளலாம்.

இப்படிக்கு,

பாலகவி **S. N. பிச்சை ஆச்சாரி அவர்கள்,**

புதூருத்தமனூர், பூவாளூர் P. O.

S. I. R. லால்குடி தாலூகா,

திருச்சினப்பள்ளி ஜில்லா.